**தலைப்பு – 114, போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 306 | புகையிரதத் திணைக்களம் |
| 307 | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 56,659,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 47,853,971,203 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 138,090,867 இற்கும் ரூபா 5,713,887,082 இற்கும் இடைப்பட்ட அளவில் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 5.14 சதவீதத்திற்கும் 47.17 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 114 | போக்குவரத்து அமைச்சு | 5,705,810,000 | 6,406,100,000 | 5,667,471,138 | 730,551,780 | 8,338,862 | 5,675,548,220 |
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 9,012,790,000 | 32,847,800,000 | 8,647,655,193 | 30,259,883,959 | 365,134,807 | 2,587,916,041 |
| 307 | மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் | 1,553,300,000 | 1,133,200,000 | 1,528,893,206 | 1,019,515,927 | 24,406,794 | 113,684,073 |
| | மொத்தம் | **16,271,900,000** | **40,387,100,000** | **15,844,019,537** | **32,009,951,666** | **427,880,463** | **8,377,148,334** |

### 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2012 ஆம் ஆண்டில் 04 வருமான தலைப்புக்களிற்காக ரூபா 12,199 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வருமான மதிப்பீட்டினை ரூபா 523 மில்லியனால் மிகைத்து ரூபா 12,722 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு வருமானத்தினை 4 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மிகைச் சேகரிப்பு | மிகைச் சேகரிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| புகையிரத பொது முகாமையாளர் | 20:01:01:00 | 4,497,000,000 | 4,851,876,013 | 354,876,013 | 08 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் | 20:03:02:14<br>10:03:07:04<br>10:03:01:00 | 7,702,400,000 | 7,870,314,096 | 167,914,096 | 02 |
| மொத்தம் | | 12,199,400,000 | 12,722,190,109 | 522,790,109 | |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 114 | 11401 | 9,000,000 | 5,654,852 | 3,800,000 | 4,632,732 | 39,000,000 | 22,211,216 |
| 306 | 30601 | 530,000,000 | 238,792,923 | 325,000,000 | 457,277,673 | 1,993,000,000 | 753,725,047 |
| 307 | 30701 | 18,000,000 | 17,863,842 | 15,000,000 | 17,533,353 | 100,000,000 | 81,547,823 |

### 2.3.2 களஞ்சிய முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் புகையிரதத் திணைக்களத்தினால் களஞ்சிய முற்பணக் கணக்கொன்று பேணிவரப்பட்டிருந்தது.

#### (அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

களஞ்சிய முற்பணக் கணக்கொன்றிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 306 | 30602 | 1,700,000,000 | 1,632,141,769 | 1,200,000,000 | 1,215,103,213 | 5,311,000,000 | 4,969,620,204 |

### 2.4 பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 422,544,996 ஆக இருந்தது.

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 114 – போக்குவரத்து அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

போக்குவரத்து அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இலுள்ள பொது அவதானிப்பு மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்**

I. அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் பெற்றரிகளிலிருந்து ரூபா 3,830,702 பெறுமதியான 183 பெற்றரிகள் கண்டிப் பிரதேசத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அவைகள் கையேற்கப்பட்டமை குறித்து கண்டிப் பிரதேச இலங்கை போக்குவரத்துச் சபையின் அலுவலகம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

II. இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்தினால் ருஹுணு பிரதேச அலுவலகத்திற்கான வாகன பெற்றரிகளைக் கையேற்கையில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,569,960 பெறுமதியான 75 வாகன பெற்றரிகளும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,474,845 பெறுமதியான 166 வாகன பெற்றரிகளுமாக மொத்தம் ரூபா 5,044,805 பெறுமதியான 241 பெற்றரிகள் குறைவாகக் கையளிக்கப்பட்டிருந்தன.

**(அ) பாதீட்டு முரண்**

(i) 12 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,501,800,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 29 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டின் 5 சதவீதத்திற்கும் இற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்துவரும் குறைந்தது 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த

திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 பெப்ரவரி 01 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 07 உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், முதலாம் காலாண்டுக்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மாத்திரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக 05 வாகனங்கள் விளைவற்றவையாகும் மேலும் 05 வாகனங்கள் குறவைாகப் பயன்படுத்தப்பட்டும் இருந்தன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய PF/Board of Survey/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2012 இன் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வினை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தி அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 யூன் 28 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வுச் சபை 2011 ஆம் ஆண்டுக்கே நடாத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தது.

### (இ) வெளித்தரப்பின்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் முறையற்ற விதத்தில் ரூபா 3,800,000 பெறுமதியான 03 வாகனங்கள் 03 அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

**(ஈ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான 01 ஏக்கர் 25.75 பேர்ச் காணி மற்றும் அதிலுள்ள அலுவலகக் கட்டிடங்கள் அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5,600,000 பெறுமதியான 07 வாகனங்கள் ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற்று பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 313,575,577 ஆக காணப்பட்டதுடன் அப்பொறுப்புக்கள் ஒரு ஆண்டிற்கும் குறைந்த காலப்பகுதிக்குரியதாகும்.

**1.6 இணக்கமின்மைகள்**

2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கைக்கு முரணாக 07 மேலதிக தொலைபேசி மற்றும் தொலைநகரி இணைப்புக்களும் பெயரற்ற 02 பதவிகளுக்காக 02 தொலைபேசி இணைப்புக்களும் வழங்கப்பட்டு மொத்தமாக ரூபா 473,615 மேலதிக கிரயம் செய்யப்பட்டிருந்தது.

## 1.7 செயற்திட்டங்களைச் செயற்படுத்தல் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டங்களைத் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருத்தல் மற்றும் செயற்திட்டங்களை தொடங்குவதில் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. (பாராளுமன்றத்திற்கு தனித்தனியாக அறிவிக்கப்படுகின்ற வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள் நீங்கலாக)

### (அ) செயற்திட்டங்களை தொடங்குவதில் தாமதங்கள்

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் | 2012 ஆம் ஆண்டின் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | ரூபா | |
| i. | மாத்தறை - கதிர்காமம் உத்தேச புகையிர வீதிச் செயற்திட்டம் (பெலியத்தையிலிருந்து கதிர்காமம் வரை) | 92,252.29 | 2006 | 2017 | 1,473.62 | 134.46 | பெலியத்தையிலிருந்து கதிர்காமம் வரை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற விதத்தில் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள புகையிர வீதியினை மாற்றியமைக்குமாறு பிரேரணை செய்யப்பட்டு அதற்கேற்ப புதிய புகையிரதப் பாதையினை தெரிவு செய்வதற்கான கற்கை இடம்பெற்று வருவதாக |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| ii. | மாத்தறை - கதிர்காமம் உத்தேச புகையிர வீதிச் செயற்திட்டம் (மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை) | 40,533.55 | 2006 | உடன்படிக்கைக் காலம் 03 ஆண்டுகளாக காணப்பட்டதுடன் முற்பணம் செலுத்தப்படுகின்ற திகதியின் படி பூரணப்படுத்த வேண்டிய திகதி தீர்மானிக்கப்படும் | - | - | காணிகளை கையேற்பதில் தாமதம் மற்றும் செயற்திட்டத்திற்கு தேவையான கடனைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை |
| iii. | ஹொரண – கொட்டாவ உத்தேச புகையிரத வீதி - சாத்தியக் கற்கையும் சுற்றாடல் கற்கையும் | 11.00 | 2006 | 2008 ஒக்தோபர் 30 | 6.00 | 2.69 | மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அக் கற்கையினை மேற்கொள்வதற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| iv. | குருநாகல் ஊடாக தம்புள்ள - ஹபரண உத்தேச புகையிரப் பாதை | 4,000.00 | 2008 ஏப்ரல் 08 | 2009 சனவரி 31 | 19.90 | 0.58 | சுற்றாடல் நடவடிக்கையினை மேற்கொள்ளல் மற்றும் மத்திய புள்ளிகளைக் குறித்தலுக்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவு தொடர்பில் விலை திருத்தம் கோரப்பட்டிருந்த போதிலும், அது வழங்கப்படாமையால் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. |
| v. | கொழும்பு - ஹம்பாந்தொட்டை களனிவழி உத்தேச புகையிரப் பாதை – பொருளாதார சாத்தியக் கற்கையும் சுற்றாடல் மதிப்பீட்டுக் கற்கையும் | 5,750.00 | 2008 ஏப்ரல் 08 | 2009 சனவரி 31 | 5.40 | செலவு செய்யப்பட்டிருக்கவில்லை | மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு கற்கையினை மேற்கொள்வதற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| vi. | மதவாச்சி – திருக்கோணமலை உத்தேச புகையிரப் பாதை – முந்திய சாத்தியக் கற்கை | 9.00 | 2010 சனவரி 01 | 2012 நவம்பர் 28 | 4.20 | 4.24 | சாத்தியக்கூற்று அறிக்கையினை தயாரிப் பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், இறுதி அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு செலவிடப்பட்ட செலவினம் இதன் கீழ் உள்ளடங்கியுள்ளது. |
| vii. | வெல்லவாய – பிபில – பதுளை புகையிரப் பாதை<br>முன் சாத்தியவள ஆய்வு | 9.00 | 2011 பெ்ரவரி 01 | 2012 திசெம்பர் 30 | - | செலவு செய்யப்பட்டிருக்கவில்லை | இந்த புகையிர பாதையினை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2011 திசெம்பர் 01 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த வீதியை மாற்றியமைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி, எம்பிலிபிடிய – மொனராகலை – கதிர்காமம் - அம்பாறை – மட்டக்களப்பு ஊடாக புகையிரத வீதியொன்றை அமைப்பதற்கு ஆரம்ப சாத்தியக் கற்கையொன்றை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தினை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஒப்படைப்பதற்காக 2012 ஏப்ரல் 05 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், ஒப்பந்தத்தை கையளிக்க இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| viii. | திருக்கோணமலை – மாஹோ – புத்தளம் உத்தேச புகையிரப் பாதை – ஆரம்ப சாத்தியவள கற்கை | 1.00 | 2011 பெப்ரவரி 01 | 2012 திசெம்பர் 25 | 0.10 | 0.11 | சாத்தியவள ஆய்வு அறிக்கைளை தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்ப அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |

**1.8 நட்டங்களும் சேதங்களும்**

06 வாகனங்களின் விபத்துச் சம்பவங்கள் தொடர்பில் ரூபா 2,062,819 மொத்தமான நட்டங்கள் ஏற்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 346,200 நட்டத்தினை தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2010.09.01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நேரடி தொலைபேசி தொடர்புகள் 28 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த உத்தியோகத்தர்களினால் ரூபா 507,065 மொத்தமான தொலைபேசி அழைப்புக்கள் தமது நேரடி தொலைபேசிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படாது அமைச்சின் பொது தொலைபேசியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களின் தொலைபேசி செலவினங்களின் எல்லைகள் மீறப்படுதல் தவிர்க்கப்பட்டிருந்தன.

**1.10 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 20 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 107 | 70 | 37 |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 41 | 04 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 185 | 139 | 46 |

இலங்கை புகையிரத திணைக்களத்தின் சமயாசமய நியமனம் பெற்றுக்கொண்டிருந்த 50 ஊழியர்களிற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் போக்குவரத்து அமைச்சிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அமைச்சிற்கு விடுவிப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் மேலதிகநேரப் படிகளாக ரூபா 1,418,383 மொத்தமான தொகை புகையிரதத் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அத் தொகை அமைச்சினால் புகையிரத திணைக்களத்திற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 306 – இலங்கை புகையிரத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி புகையிரப் பொது முகாமையாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை புகையிரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஐ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் மீளாய்வாண்டுக்குரிய கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இல. | கணக்கின் பெயர் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 306 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2013 யூலை 18 |
| 20:01:01:00 | வருமானக் கணக்கு | 2013 ஏப்ரல் 09 |
| 30601 | அரங்சாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் கணக்குகள் மீதான இணக்கக் கூற்று | 2013 ஏப்ரல் 26 |
| 30602 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 2013 மே 10 |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணியிருக்காமை**

(i) இலங்கை புகையிரத திணைக்களத்தினால் பின்வரும் பட்டியல்கள், பட்டோலைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிராமை தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| அரையாண்டு வைப்புக்கள் பட்டியல் | நிதிப்பிரமாணம் 571(1) | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிலுவையாகவுள்ள தனிப்பட்டோர் கடன் மீதிகள் பட்டோலை | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | -மேற்படி- |

(ii) இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 50 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 23 ஐய வினாக்களிற்கும் 2013 மார்ச் 31

ஆந் திகதி வரைக்கும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அக் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பில் கணிப்பிடக் கூடியதாகவிருந்த கொடுக்கல்வாங்களின் பெறுமதி ரூபா 19,546,573,929 ஆகும்.

**(இ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

(i) 2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதனச் செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து 9 சதவீத ஏற்பாடு நிறுத்தி வைக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 6.2 சதவீத ஏற்பாடு மாத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) **பாதீட்டு முரண்**

- 10 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 994,090,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

- 25 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதத்திற்கும் இற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது இரத்மாலனை கொதலாவலபுர இல் அமைந்துள்ள புகையிரத விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கியமையால் கிடைத்திருந்த ரூபா 57,400 தொகையான வருமானம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மைதானத்திலுள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு

புகையிரத பாதுகாப்புப் பிரிவு எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள 07 வியாபார நிலையங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 301,582 வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| புகையிரத நிலையம் | | அமைந்துள்ள வியாபார நிலையங்களின் எண்ணிக்கை | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | மீரிகம | 1 | 26,880 |
| (ii) | ஜாஎல | 1 | 40,200 |
| (iii) | மஹரகம | 5 | 235,502 |
| | மொத்தம் | 7 | 302,582 |

(iii) 20.01.01.00 ஆம் இலக்க வருமானக் கணக்கின் படி ரூபா 1,263,848,467 தொகையான வருமானங்கள் நிலுவையாக காணப்பட்டதுடன் அந் நிலுவை வருமானங்கள் 01 முதல் 38 வருட காலப்பகுதிக்குரியனவாகும். அந்த நிலுவை வருமானங்களை அறவிடுவதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன. நிலுவையான வருமானம் மீதான காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **வருமானக் குறியீடு** | **காலப்பகுப்பாயவு** | | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானம்** |
|---|---|---|---|---|
| | 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைய | 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 20.01.01.00 | 664,132,149 | 94,605,988 | 505,110,330 | 1,263,848,467 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் நிலுவை வருமானம் மீதான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) திணைக்களத்திற்குச் சொந்தமான வளவில் பொருத்தப்பட்டுள்ள 117 தொலைபேசிக் கூடங்களிற்காக ரூபா 5,958,975 தொகையும் புகையிரத நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள 10 ரெலர் இயந்திரங்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 19,578,000 கட்டணமும் மீளாய்வாண்டிலேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 01 ஆம் இலக்க கொழும்பு கோட்டை உணவகம் மற்றும் 02 ஆம் இலக்க கொழும்பு கோட்டை/ கண்டி உணவகம் என்பன திணைக்களத்தினால் 2009 பெப்ரவரி மாதத்திலிருந்து தனியார் நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கியமையால் மீளாய்வாண்டு வரை நிலுவை மின்சாரக் கட்டணமான ரூபா1,221,100 தொகையினையும் ரூபா 441,900 தாமதக் கட்டணத்தினையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii) நீர்கொழும்பு உணவகம் கேள்விகோரல்களின்றி மாதாந்தம் ரூபா 65,000 வாடகைக்கு 2010 யூன் 01 ஆந் திகதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆகஸ்ட் வரை நிலுவை வாடகை ரூபா 44,446 ஆக காணப்பட்டது. இந்த உணவகத்தினை இதற்கு முன்னர் வாடகைக்கு வழங்கியமையால் பெறப்பட வேண்டியிருந்த ரூபா 22,629 தொகையும் நிலுவையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இந்த உணவகத்திலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 70,075 ஆகும்.

(viii) திணைக்களத்தினால் 2006 ஜனவரி 01 ஆந் திகதி அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்த திருத்திய வாடகை அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ள 16 கடை அறைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 4,880,013 ஆகும். மேலும் அக் கடைகளை கையேற்பதற்காக எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் வெளியேறியிருக்கவில்லை.

(ix) 2005 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வேயங்கொட, நுகேகொட, பாதுக்க மற்றும் மஹரகம புகையிரத நிலையங்களின் கடைகளிலிருந்தான நிலுவை வாடகை வருமானம் ரூபா 1,519,271 ஆகும்.

(x) 2011 ஆம் ஆண்டில் கேட்போர் கூடத்தை வாடகைக்கு வழங்கியமையால் கிடைத்திருந்த ரூபா 67,500 வருமானத்தையும் 2012 ஆம் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 132,500 தொகையையும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்காது முறையான அங்கீகாரமின்றி சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(xi) பதுளை மாநகர சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிக்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 602,274 ஆகும்.

(xii) பண்டாரவலை புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான 7.65 பேர்ச் காணியினை அரசாங்க வங்கியொன்றுக்கு மீண்டும் குத்தகைக்கு வழங்குகையில் 2007 ஆம் ஆண்டின் புதிய விலை மதிப்பீட்டுப் பெறுமதியின் படி குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்காமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்திற்கு இழப்பாகியிருந்த குத்தகை வாடகை ரூபா 350,000 ஆகும்.

(xiii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 32 காணிகளிற்காக 2007 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 205.93 மில்லியனாகும்.

(xiv) திணைக்களத்திற்குச் சொந்தமான வைஸ்ரோய் புகையிரத்தை தனியார் நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கிய பின்னர் அதற்கு வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களிற்காக அந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,092,801 தொகையை அறிவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xv) திணைக்களத்திற்குச் சொந்தமான மவுன்ட் மேரி விளையாட்டு மைதானத்தை குத்தகைக்கு வழங்கியமையால் கிடைத்திருந்த வருமானத்தை நீண்ட காலமாக அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்காது முறையான அங்கீகாரமின்றி தனிப்பட்ட வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,719,902 வருமானம் கிடைத்திருந்தது. அந்த வருமானம் தொடர்பான எவ்விதத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 30601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 74,184,173 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன. நிலுவையாகவுள்ள கடன் மீதிகளில் 63 சதவீதமானவை அல்லது ரூபா 46,512,602 தொகை 03 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டு வரும் மீதியாகும்.

(ii) திணைக்களப் புத்தகத்தின் படியும் பொது திறைசேரியின் கணனி அச்சுப் பிரதியின் படியும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியாக ரூபா 4,177,805 தொகை 2004 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற போதிலும், அதனைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையேயான ரூபா 11,957,423 வேறுபாட்டை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) புகையிரத திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 08 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 1,098,535 கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 18 உப அலுவலகங்கள் தொடர்பில் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட ரூபா 39,178,803 மொத்தமான கடன் தொகை தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4 மற்றும் 4.5 ஆம் பந்திகளின் பிரகாரம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள பணத்தை பிரதான கடனாளியிடமிருந்து அறவிட முடியாதுள்ள சந்தர்ப்பங்களில் அவர் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை பிணைதாரர் தொடர்பிலும் பின்பற்றி அப்பணத்தை பிணையாளர்களிடமிருந்து

அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், பதவி வறிதாக்கப்பட்ட ஊழியர்களின் 08 உப திணைக்களங்கள் தொடர்பில் ரூபா 22,258,450 கடன் மீதிகளை அவ்வாறு அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 15 உப திணைக்களங்களில் வேலை இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாது நீண்டகாலமாக நிலவிவருகின்ற ரூபா 10,647,963 மொத்தமான கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) சேவையிலிருந்து அகற்றப்பட்ட ஊழியர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவிவருகின்ற ரூபா 235,701 மொத்தமான கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) மாவட்ட பொறியியலாளர் (கீழ்மட்டம்) காலி உப அலுவலகத்தில் ரூபா 535,780 தொகை கணக்கிணக்கக் கூற்றில் ஏனைய மீதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அக்கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கலைப்பு முற்பணக் கணக்கு**

புகையிரத் திணைக்களத்தில் 1987 திசெம்பர் மாதத்தில் கலைப்பதற்கான நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த 04 முற்பணக் கணக்குகள் காணப்பட்டதுடன் அந்த முற்பணக் கணக்குகளில் நிலவிய ரூபா 3,394,553 கூட்டுத்தொகையான தொழிற்பாட்டு நட்டத்தை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

(i) பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1980 முதல் 2011 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்படாதிருந்த முற்பணத் தொகை ரூபா 63,787,848 ஆக காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் முற்பணங்களில் ரூபா 12,621,901 ஆன முற்பணத் தொகை 2013 யூன் வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1993 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பொருட்களை இறக்குமதி செய்கையில் சுங்கக் கட்டணமாக ரூபா 114,348,708 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நட்டம் இருப்புக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1998 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 67,372,861 ஆக காணப்பட்டதுடன் அப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) காலம் கடந்த மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்களிலிருந்து எழுந்த ரூபா 13,829,758 நட்டம் கடந்த பல வருடங்களாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அந்த நட்டத்தை இருப்பிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்கொடுத்தோர் பட்டியலில் 1996 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான ரூபா 131,433,982 கடன்கொடுத்தோர் மீதிகளே உள்ளடங்கியிருந்ததுடன் அந்த மீதிகளில் உள்ளடங்கியிருந்த பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த நிறுவனங்களிற்கு செலுத்தப்பட்டு முற்பணங்களாக கழிக்கப்பட்டிருந்த ரூபா 9,184,686 ஆன பெறுமதியில் அக் காலப்பகுதியுடன் தொடர்பற்ற 1992 முதல் 1995 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,916,998 முற்பணத் தொகையும் உள்ளடங்கியிருந்தது.

(vi) இரத்மலானை களஞ்சியத்திற்காக 2012 பெப்ரவரி 09 ஆந் திகதி ரூபா 2,177,448 செலவிடப்பட்டு (Mono Black Lead Battery Dong – Ah-N2002 12V, 215 Ab With Aid) 39 பற்றரிகள் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பற்றறிகளின் உத்தரவாதக் காலம் ஒரு வருடமாக காணப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 07 ஆந் திகதி வரை அந்த பற்றறி இருப்பினை பயன்பாட்டிற்கு எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(vii) தேவையினை இனங்காணாது மருதானை களஞ்சியத்திற்காக 2012 சனவரி 12 ஆந் திகதி ரூபா 579,999 செலவிடப்பட்டு கறுப்பு நிறமான 17'' x 11'' அளவுடைய 200 தோற் பைகள் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டிருந்த 200 பைகளில் கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்காக 31 பைகள் மாத்திரம் வினியோகிக்கப்பட்டிருந்ததுடன் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது

களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்ட 169 பைகளின் பெறுமதி ரூபா 490,099 ஆகும்.

(viii) 2012 யூலை மாதத்தில் இரத்மலானை களஞ்சியத்திற்கு 07 அச்சு இயந்திரங்கள் (Facsimiles Printer) முறைப்படியாக கையேற்கப்பட்டிருந்தன. அவற்றின் பெறுமதி ரூபா 203,840 ஆகும். 2012 ஒக்தோபர் 07 ஆந் திகதியளவில் அந்த அச்சு இயந்திரங்கள் எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ix) RJ/25/3 ஆம் இலக்க இருப்பு விடயத்தினை ஒரே தடவையில் கொள்வனவு செய்யாது 06 சந்தர்ப்பங்களில் அவ்வப்போது கொள்வனவு செய்திருந்தமையால் கொள்வனவு வழிகாட்டல்களின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. அதன் மூலம் ஏற்பட்டிருந்த கணிப்பிடக் கூடியதாகவிருந்த நட்டம் ரூபா 105,921 ஆகும்.

(x) கணக்குகள் பிரிவில் பராமரித்து வரப்படுகின்ற பதிவேடுகளின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டுக் கம்பனிகளிடமிருந்து 360 சந்தர்ப்பங்களில் கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 573,481,923 பெறுமதியான பொருட்கள் வழிச் சரக்காக காண்பிக்கப்பட்டிருந்தது. நாணயக் கடிதத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த இந்த இருப்புக்கள் கிடைத்திருக்காமை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு வழங்குனர்களிற்கு ரூபா 159,561,864 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 35 சந்தர்ப்பங்களில் கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 105,299,195 பெறுமதியான பொருட்கள் கிடைத்திருக்கவில்லை.

**(ஏ) கட்டுநிதிக் கணக்கு**

(i) கட்டுநிதி தொடர்பாக திணைக்களத்தினால் கட்டுநிதிக் கணக்கு பேணப்படவோ அல்லது கட்டுநிதி மீதி திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் கணக்கிணக்கம் செய்யப்பட்டோ இருக்கவில்லை. அதற்காக கடன் கணக்கொன்றாக 8003 ஆம் இலக்கத்தின் கீழ் புகையிரத பொது முகாமையாளரின் பெயரில் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 (இ) இன் பிரகாரம் உப கட்டுநிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 102,602,082 உப கட்டுநிதிகள் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 216,664,689 ஆக காணப்பட்டது. 2 ஆண்டுகள் காலங்கடந்த ரூபா 29,967,732 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை தலைவர்கள் என்போரிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 2.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்கும் வகையில் 2010 ஆம் ஆண்டு மற்றும் அதனைத் தொடர்ந்து திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 ஆகஸ்ட் 17 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 2.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402

மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்தது. அப் பிரிவு 23 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் எவ்வித உள்ளக கணக்காய்வு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தி இருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| (i) காணி (ஏக்கர்) | 1490 | 25 ஆண்டுகளிற்கு மேல் |
| (ii) மோட்டார் வாகனம் -கார் | 01 | 10 ஆண்டுகளிற்கு மேல் |
| (iii) பேரூந்து | 01 | 10 ஆண்டுகளிற்கு மேல் |
| (iv) இயந்திர உபகரணம் மற்றும் என்ஜின் | 43 | 25 ஆண்டுகளிற்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுகளிற்கான களஞ்சிய மெய்மையாய்வு அறிக்கைகளின் படி ரூபா 241,513 மொத்தமான 13 பொருள் விடயங்கள் மிகையாகவும் பெறுமதி மதிப்படப்பட முடியாத 05 பொருள் விடயங்களில் மிகையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ் இருப்பு மிகை பெறுமதி களஞ்சிய முற்பணக் கணக்கின் இருப்பு மீதிக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அப் பெறுமதியால் இருப்பின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டுகளிற்கான மெய்மையாய்வு அறிக்கைகளின் படி ரூபா 14,860,600 மொத்தமான 268 பொருள் விடயங்களில் குறைவும் பெறுமதி மதிப்படப்பட முடியாத 20 பொருள் விடயங்களில் குறைவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ் இருப்பு குறைவுகளை இறுதி இருப்பு பெறுமதிக்கு சீராக்கியிருக்காமை காரணமாக களஞ்சிய முற்பணக் கணக்கின் இருப்பு மீதி அதற்குச் சமமான தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அக்குறைவு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வில் அவதானிக்கப்பட்டிருந்த மிகைகளும் குறைவுகளும் இருப்புக்கு சீராக்கப்பட்டிருக்காமை தொடர்பில் முன்னைய ஆண்டுகளிற்கான கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | மிகை | | குறை | |
|---|---|---|---|---|
| | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| 2010 | 14 | 212,420 | 232 | 9,860,577 |
| | 10 | பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை | 59 | பெறுமதி காட்டப்பட்டிருக் கவில்லை |
| 2011 | 13 | 162,471 | 196 | 10,841,638 |
| | 03 | பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை | 17 | பெறுமதி காட்டப்பட்டிருக் கவில்லை |

**(இ) வெளித் தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

ரூபா 600,000 பெறுமதியான 01 ஏக்கர் 25.75 பேர்ச் காணி திணைக்களத்தினால் போக்குவரத்து அமைச்சிற்கு ஆரம்பம் முதல் விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளனவாறு தீர்க்கப்படாதுள்ள 01 ஆண்டிற்கும் குறைவான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 717,140,579 ஆகும்.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | தாபன விதிக்கோவை | | |
| (i) | VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | 4,123,595 | சேவைச் சுழற்சி அல்லது வேலைச் சுழற்சி அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு வாரமொன்றிற்கு குறைந்தபட்சம் 168 மணித்தியாலங்களிற்கு குறையாது 101 காப்பாளர்களுக்கு மீளாய்வாண்டில் மேலதிகநேர படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | VIII ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | 2,312,328 | மருதானை புகையிரத பிரதான கட்டுப்பாடாளர்களிற்கு 10165 மணித்தியால பயனற்ற காலத்திற்காக 2011 ஆம் ஆண்டில் மேலதிகப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | VIII ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு | 418,312 | அதி விசேட நிலைமையொன்றின்றி, பாதுகாப்பின்றி மற்றும் தொடர்ச்சியான கட்டுப்பாடின்றி வெற்றிடங்கள் காணப்பட்ட பதவிகளுக்குத் தேவையான மனித மணித்தியால அளவினைக் காட்டிலும் 3194 மனித மணித்தியாலங்களிற்காக மேலதிகப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | XII ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பிரிவு | 84,355 | 06 உத்தியோகத்தர்களால் தனியார் மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு தடவையில் பெற்றுக்கொள்ளக்கூடிய 14 நாட்கள் விடுமுறைக்கு மேலதிகமாக 121 விடுமுறைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (v) | XXX ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு மற்றும் IX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | 117,650 | உத்தியோகத்தர் ஒருவர் தனது சாதாரண உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்கு புறம்பான ஏதேனுமோர் பணியை நிறைவேற்றுவதற்காக பொறுப்பேற்பதற்கு முன்னர் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது இரண்டு உத்தியோகத்தர்கள் கிரிக்கெட் மத்தியஸ்தகர்களாக பங்குபற்றி படிகளை பெற்றுக் கொண்டிருந்த போதிலும், அத் தொகையிலிருந்து செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற குறித்த சதவீதம் கழிக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (vi) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவு | 153,924 | புகையிரத திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த கடன் மீதிகள் அறவிடப்படாது அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (vii) | ii ஆம் தொகுதியின் I ஆம் பாகத்தின் (2) ஆம் பந்தி | 3,898,568 | போலி மருத்துவர்களின் பெயர்களையும் பதிவு இலக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பொய்யான மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து 5664 விடுமுறைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அத் தொகைகளை அறவிடுவதற்கு அல்லது அந்த ஆவணங்களைத் தயாரித்திருந்த நபர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை<br>-------------------------------- | | |
| (i) | நிதிப்பிரமாணம் 105 | 20,702,215 | திணைக்களத்தின் ரூபா 20,702,215 பெறுமதியான 504 பொருள் குறைவு தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 175(2) | 57,660,420 | முறைப்படி நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371(2) | 137,857,000 | குறித்த நோக்க உபகட்டுநிதிகள் வழங்கப்படுகையில் வழங்கப்பட்ட கருமம் நிறைவேற்றப்பட்டவுடன் அது தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டில் 2204 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்களில் ரூபா 137,857,000 முற்பணங்கள் மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571 (1)(2)(3) | 29,327,971 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலங்கடந்த சகல வைப்புக்களினதும் பட்டியல்களைத் தயாரித்து அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுதல் அல்லது கூடிய விரைவில் மீளளிக்கப்படுதல் வேண்டிய போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவ்வாறு அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாத காலம் கடந்த வைப்புக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுமதி ரூபா 29,327,971 ஆகும். |
| (v) | நிதிப்பிரமாணம் 751 | 500,202 | வடக்கு புகையிர வீதியை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 760 மற்றும் 110 | 35,562,815 | பொருட்கள் காணாமல் போதல் அல்லது குறைவுகள் தொடர்பில் அப்பெறுமதி பொருள் பதிவேட்டுப் புத்தகம், இருப்புப் புத்தகம் போன்றவற்றிலிருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும், 2010 முதல் 2012 திசெம்பர் 31 வரை அவதானிக்கப்பட்ட பொருள் இருப்புக் குறைவுகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 767 | 616,401 | 2010 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 வரை அவதானிக்கப்பட்ட இருப்பு மேலதிகங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சனாதிபதி செயலக சுற்றறிக்கை<br>------------------------------------- | | |
| | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 145,089 | சனாதிபதி செயலக சுற்றறிக்கைக்கு முரணாக போக்குவரத்து அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு புகையிரத திணைக்களத்தின் தலைப்பிலிருந்து மீளாய்வாண்டில் வாகன திருத்தச் செலவினத்திற்காக ரூபா 145,089 தொகையும் மாதாந்தம் வழங்கப்பட்ட 340 லீற்றர் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட எரிபொருள் செலவும் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை<br>------------------------------- | | |
| (i) | 2006 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 187/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகள் | 391,297,515 | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வருமான அறிக்கைகள் மற்றும் மாதாந்த வருமான அறிக்கைகள் திறைசேரிப் புத்தகத்துடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு சீராக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 391,297,515 தொகையான மீதியின் வேறுபாட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கிணக்கம் செய்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2004 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 174 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2,777,000 | 2004 இன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் அகற்றல்களிலிருந்து ஆரம்ப மீதிகள் கழித்துக் காண்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் ஆரம்ப மீதிகள் கழிக்கப்படாது காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,777,000 பெறுமதியான சொத்துக்களின் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | | |
| | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை | 17,237,090 | 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது வெளிநாடு சென்றிருந்த 129 உத்தியோகத்தர்களிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | புகையிரத பொது முகாமையாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை | | |
| | 2011 நவம்பர் 23 ஆந் திகதிய ப.அ/பொது/2011/09 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,783,818 | புகையிரத வீதிகளின் குறுக்கே பொருத்தப்பட்டுள்ள புகையிரதக் கடவைகளுக்கு சேதங்கள் ஏற்படுத்தியமைக்காக நட்டம் விளைவித்த தரப்பினரிடமிருந்து ரூபா 25,000 தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 78 சந்தர்ப்பங்களில் அவ்வாறு விளைவித்திருந்த நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.6 செயற்திட்டங்களைச் செயற்படுத்தல் பலவீனங்கள்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்பட்டிருந்தமை, செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | தொடங்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| (i) புகையிரத பெட்டிகளை தயாரித்தல் செயற்திட்டம் | 30,000,000 | குறிப்பிடப்பட வில்லை. | பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களத்தினால் கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பொல்கஹவலையிலிருந்து அநுராதபுரம் வரையான இரு வழிப்பாதை நிர்மாணம் | 1,000,000 | குறிப்பிடப் படவில்லை. | -மேற்படி- |
| (iv)பாலங்கள் செயற்திட்டம் (இலங்கை அரசாங்கம் / பெல்ஜியம் அரசாங்கம்) | 214,765,785 | குறிப்பிடப் படவில்லை. | கடன் உடன்படிக்கை 2013 ஆகஸ்ட் மாதத்தில் கைச்சாத் திடப்பட்டிருந்தமையால் 2012 ஆம் ஆண்டிற்காக செலவுகள் செய்யப்பட்டிருக் கவில்லை. |
| (v) -மேற்படி- | 250,000,000 | -மேற்படி- | 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 249,000,000 பிடித்து வைக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களைத் நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| (i) ராகம/புத்தளம் இரு வழிப் பாதையினை நிர்மாணித்தல் | 40,000,000 | குறிப்பிடப்பட வில்லை | குறிப்பிடப்பட வில்லை | 8,873,037 | நிளஅளவை உத்தியோகத்தர் வெற்றிடம் நிரப்பப்படாமை |
| (ii) கண்டி/ பேராதனை /கடுகன்னாவ புகையிரத முக்கோண அபிவிருத்திச் செயற்திட்டம் | 15,000,000 | குறிப்பிடப்பட வில்லை | குறிப்பிடப்பட வில்லை | 2,244,683 | -மேற்படி- |
| (iii) கொழும்பு மாத்தறை புகையிர வீதியினை மேம்படுத்தல் இலங்கை அரசு/இந்திய அரசு | 700,000,000 | குறிப்பிடப்பட வில்லை | குறிப்பிடப்பட வில்லை | 225,529,205 | சில அத்தியாவசிய அறிக்கைகள் இன்னும் கிடைக்காமை |

## 2.8 வங்கிக் கணக்குகளை இயக்கிச் செல்வதிலுள்ள குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

புகையிரத திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல் பகுப்பாய்வுகளின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 01 மாதத்திற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மேல் 03 இற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| **(i)** | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகள் | 52,700 | -- | -- | 52,700 |
| **(ii)** | மதிப்பழந்த காசோலைகள் | 220,220 | 11,820 | 953,699 | 1,185,739 |

## 2.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்மலானையில் அமைந்துள்ள 236 புகையிர உத்தியோகபூர்வ இல்லங்களிற்கு தனிப்பட்ட விதத்தில் நீர் இணைப்புக்கள் வழங்கப்படாதிருந்ததுடன் அவற்றிற்காக திணைக்களத்தின் பிரதான நீர் வழங்கலிருந்து நீர் வழங்கப்பட்டிருந்து. அதிலிருந்து 36 இல்லங்களிற்காக நீர் இணைப்புக்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2010 திசெம்பர் மாதத்தில் ரூபா 2,300,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் மாதம் வரை அக் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எஸ்ஆர்எஸ்/எவ் 6604 ஆம் இலக்க பாகிஸ்தான் கடன் உடன்படிக்கையின் கீழ் 2011 நவம்பர் 21 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 15 எரிபொருள் போக்குவரத்து தாங்கிகள் துறைமுகத்திற்கு வந்தடைந்த பின்னர் அவற்றை பரிசோதித்ததில் அவற்றின் மேற்பகுதியில் காணப்பட்ட குறைகளை திருத்துவதற்காக தாங்கியொன்றிற்கு ரூபா 310,108 வீதம் ரூபா 4,651,620 செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை உற்பத்தியாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் 11.3 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த தாங்கிகளை இந் நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய திகதியிலிருந்து 24 மாதங்கள் அல்லது துறைமுகத்தில் இறக்கப்பட்ட திகதியிலிருந்து 30 மாதங்களிற்குள் உற்பத்திசெய்து வழங்கப்பட்டுள்ள தாங்கிகளிலுள்ள தொழில்நுட்ப அல்லது பொறியியல் குறைபாடுகளிற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை அறவிடக்கூடியதாக இருந்த போதிலும், தற்போது அத் தாங்கிகள் இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு 23 மாதங்கள் கடந்திருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 31 வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு கோட்டைக்கும் கண்டிக்குமிடையிலான நகர்சேர் கடுகதி புகையிரதத்திற்கு குளிரூட்டப்பட்ட பெட்டிகளை இணைக்கும் உடன்படிக்கையினை கைச்சாத்திடுகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை, அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அப்பெட்டிகளை வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கும் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படைத் தன்மையின்றியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிப்பிரமாணம் 702 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட படிவங்களில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருக்காமையால் ரூபா 40,870,160 நிலுவை வருமானங்களை திறைசேரிக்கு அனுப்பிவைக்க முடியாதிருந்தது.

(ஈ) 02 குத்தகை உடன்படிக்கைகளிலிருந்து 2012 ஆகஸ்ட் அளவில் கிடைக்கவேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 643,435 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப்பிரமாணம் 323 இன் பிரகாரம் அரசாங்க நிதிகளை துஷ்பிரயோகம் செய்யக்கூடாத போதிலும், திணைக்களத்தின் நாளாந்த வருமானங்களை வங்கியில் வைப்புச்செய்யாது தொழிற்சங்கங்களினால் அதன் அங்கத்தவர்களின் பெயர்களிற்கு எழுதப்பட்ட காசோலைகள் புகையிரத நிலைய அதிபர்களினால் மாற்றப்பட்டிருந்தன. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டில் அச் சங்கங்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 385,000 பெறுமதியான 08 காசோலைகள் மதிப்பிழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நாளாந்த பெறுவனவுகளிலுள்ள காசோலைகளை இனங்காணக்கூடிய விதத்தில் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம் 763 இன் பிரகாரம் அதிகளவில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள திணைக்களங்களினால் பொருள் உற்பத்தியில் அல்லது திருத்தங்களில் ஈடுபட்டுள்ள திணைக்களங்களினால் யாப்பியல் ஏற்பாடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்படி புகையிரத திணைக்களத்தினால் எஸிட்லின் வாயுவினை கொள்வனவு செய்கையில் அதனை அளந்து நிறுக்காது பொறுப்பேற்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் இக் குறைபாடு கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், அது திருத்தப்படாது 2012 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 4,467,855 பெறுமதியான எஸிட்லின் வாயு அளந்து நிறுக்காது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெறப்பட்ட அளவுகள் சரியானதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாதிருந்ததுடன் தவறுகளும் மோசடிகளும் இடம்பெறுவதற்கான ஆபத்தொன்று காணப்படுகின்றது.

(எ) 02 தொழிற்சங்கங்களிற்காக 8642 சதுர அடிகள் கொண்ட 15 அலுவலகங்களும், தொழிற்சங்கமொன்றாக பதிவுசெய்யப்பட்டிருக்காத 02 நிறுவனங்களிற்காக 1435 சதுர அடிகள் கொண்ட 02 கட்டிடங்களும் எழுத்துமூல உடன்படிக்கைகளின்றி இக்கட்டிடங்களிற்கான நீர் மற்றும் மின்சார வசதிகளுக்கு கட்டணங்கள் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) புகையிரதத்தில் பொருட்களை போக்குவரத்து செய்கையில் காணாமல்போன பொருட்கள் தொடர்பில் ரூபா 138,068 இழப்பீடு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 110,454 தொகை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்ததுடன் அவர்களிற்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மருதானை புகையிரத பிரிவிற்கு இணைப்புச்செய்யப்பட்டு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற 12 கட்டுப்பாட்டாளர்களால் மோசடியாக தயாரிக்கப்பட்டிருந்த மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 354 விடுமுறைகளிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 301,251 தொகையினை அவர்கள் ஓய்வுபெறுகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பயணச்சீட்டு இன்றி புகையிரதத்தில் பயணம் செய்கின்ற ஆட்களை பரிசோதித்தலே பயணச்சீட்டு பரிசோதகர்களின் கடமையாகும். இருப்பினும், திறைசேரியின் அங்கீகாரமின்றி பயணச்சீட்டின்றி பயணிக்கும் பிரயாணியிடமிருந்து அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தில் 10 சதவீதமான

பெறுமதி மானியமாக அப் பணியில் ஈடுபடுகின்ற பயணச்சீட்டு பரிசோதகர்கள், புகையிரத காவளாலர்கள் மற்றும் ஏனைய சேவையாளர்களிற்கு புகையிரத நிலையத்தின் மூலம் செலுத்தப்படுவதுடன் அக் கொடுப்பனவுகளிற்காக எந்தவொரு கணக்காளரினதும் அங்கீகாரம் காணப்படாமையால், அவ்வாறு செலுத்தப்படுகின்ற படிகள் உத்தியோகத்தரின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்படுகின்ற உழைக்கும்போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 இழப்புக்களும் நட்டங்களும்

25 நிறுவனங்களினால் புகையிரத்தின் மூலம் பொருட்களை போக்குவரத்துச் செய்தமைக்காக திணைக்களத்திற்கு கிடைக்கவேண்டிய ரூபா 260,017,513 நிலுவை வருமானத்தை 1980 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண் வரையான காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனங்களில் தற்போது மூடப்பட்டுள்ள நிறுவனங்களும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிகத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 160 | 97 | 63 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 349 | 146 | 203 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 9,408 | 6,844 | 3,701 | 1,137 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 13,458 | 7,538 | 5,929 | 09 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 2,674 | - | 2,674 |
| | மொத்தம் | 23,375 | 17,299 | 9,896 | 3,820 |

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு முன்மாதிரி நியமனங்களை பெற்றுக்கொண்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் போக்குவரத்து அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்கள் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 2012 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்டிருந்த

ரூபா 1,418,383 தொகையான சம்பளம் மற்றும் மேலதிகநேரப் படி என்பன அவ் அமைச்சிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. தலைப்பு 307 – மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

**3.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 20 ஆந் திகதி போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணியிருக்காமை**

**(i) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 28 கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட 10 ஐய வினாக்களிற்கும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் பதிலளிக்கப்படவில்லை.

**(ii) தகவல்களை சமர்ப்பிக்காமை**

31, 32, 60, 61, 62, 64 மற்றும் 65 ஆம் இலக்க தொகுதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சகல வாகனங்கள் தொடர்பான மற்றும் G, H மற்றும் J ஆகிய ஆங்கில எழுத்துத் தொகுதிகளில் மோட்டார் கார்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சகல வாகனங்கள் சம்பந்தமான தகவல்களை கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளிற்காக சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டில் கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளிற்காக ஏழு சந்தர்ப்பங்களில் கோரப்பட்டிருந்த 701 வாகன கோவைகள் 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செலவின விடயமொன்றின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 290,000 தொகையான மீண்டெழும் ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் குறித்த கரும உப கட்டுநிதிகள் பெற்றுக்கொள்ளப்படின் அக்கருமம் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட

வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 297,600 மொத்தமான முற்பணங்களை 01 முதல் 08 வாரங்கள் வரை காலதாமதம் செய்து தீர்த்திருந்தனர். அதற்கமைய பல்வேறு உத்தியோகத்தர்களாலும் அரசாங்க நிதிகள் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 372 இன் பிரகாரம் திணைக்களமொன்றின் கட்டுநிதி அல்லது உப கட்டுநிதியொன்றை பரீட்சித்தல் திணைக்களத்தின் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மாதமொன்றில் ஒரு தடவைக்குக் குறையாமல் பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட ரூபா 2,671,755 ஆன 99 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் திணைக்களப் புத்தகத்தின் படி மீதி ரூபா 422,075,896 ஆக காணப்பட்டதுடன் திறைசேரிப் புத்தகத்தின் படி அம்மீதி ரூபா 442,544,996 ஆக காணப்பட்டது. அதன்படி வேறுபாட்டை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) வாகனங்களைக் கையளித்தல் மற்றும் பதிவுசெய்தலிற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களில் ஒவ்வொரு மாகாண சபைக்கும் உரித்தான தொகைகளை தொடர்ந்துவரும் மாதத்தில் குறித்த மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளிற்குரிய ரூபா 40,099,186 இனை அந்த மாகாணங்களிற்கு அனுப்புவதற்கும் 2009 பெப்ரவரி முதல் 2012 திசெம்பர் வரையான காலத்தில் வாகனங்களை கையளித்தல் மற்றும் பதிவுசெய்தலின் போது அறவிடப்பட்ட ரூபா 53,288,173 முத்திரைக் கட்டண வருமானத்தினை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

சொகுசு மோட்டார் வாகன வரி – வருமானக் குறியீடு 10-03-01-00

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திணைக்களத்தினால் முறைப்படியாக வருமானப் பதிவேடுகள் பேணிவரப்படாதிருந்தமையால் முன்னைய ஆண்டுகளைப் போலவே மீளாய்வாண்டிலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்களை கணக்காய்வில் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் நிலுவை வருமானம் மீதான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2001 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் படி வருமான நிலைமையினை மதிப்பிடல், காலத்திற்குக் காலம் வருமான நிலைமையினை தொடர்ச்சியாக மீளாய்வுசெய்தல் மற்றும் கண்காணித்தல் என்பன முறைப்படி வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iv) 2004 ஆம் ஆண்டில் சொகுசு வரிக்குரித்தான வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் ரூபா 84,827,250 வரித் தொகையினை செலுத்துதல் ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. அதன்படி, இந்த சொகுசு வரி ஆரம்பிக்கப்பட்ட 1995 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான 17 வருட காலத்தில் இந்த வரிக்கு உட்பட்ட வாகன உரித்தாளர்களால் கொடுப்பனவு ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்த வரித் தொகை ஏறத்தாழ ரூபா 1,442,063,250 ஆகக் காணப்பட்டது.

(v) குறைவாக அறவிடப்பட்ட வருமானம்

சொகுசு வரி அறவிடப்பட வேண்டிய வாகனமொன்றிற்காக அறவிடப்பட வேண்டிய வரித் தொகையான ரூபா 150,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) மிகையாக அறவிடல்

2011 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 1722/27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளின் உப பிரிவின் படி மோட்டார் வாகனமொன்று இறக்குமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களிற்கு மேற்பட்டு இருப்பினும் 01 ஆண்டிற்கு குறைவான

காலத்தினுள் பதிவுசெய்யப்படுகையில் அறவிடப்படுகின்ற தண்டப்பணம் புதிய உழவு இயந்திரமொன்றிற்கு ரூபா 1,500 எனவும் பயன்படுத்திய கை உழவு இயந்திரமொன்றிற்கு ரூபா 1,750 எனவும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இறக்குமதிசெய்யப்பட்ட கைஉழவு கசல இயந்திரங்களிற்காகவும் பதிவுசெய்யப்படுதல் நிலையினைக் கருத்திற்கொள்ளாது திணைக்களத்தினால் ரூபா 1,750 தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(vii) நிலுவை வருமானம்

சொகுசு வரித் தொகைகளை அறவிடுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி ஏறத்தாழ ரூபா 1,442 மில்லியன் நிலுவை வருமானம் காணப்பட்டதுடன் அத் தொகையினை உரிய வேளையில் அறவிட்டுக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் 10 சதவீத வட்டி வீதத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு வருடந்தோரும் ஏறத்தாழ ரூபா 144 மில்லியன் நட்டமொன்று ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வருமாறு இடர், விழா முற்பணங்கள் மற்றும் ஏனைய கடன் வகைகளின் கடன் தொகைகளை உரிய பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1993 ஆம் ஆண்டிலிருந்து பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் பதவிநீக்கம் செய்யப்பட்ட எட்டு உத்தியோகத்தர்களின் ரூபா 185,388 கடன் மீதியினையும் 1998 ஆம் ஆண்டிலிருந்து வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 17 உத்தியோகத்தர்களிடமிருந்தான ரூபா 1,170,753 கடன் மீதியினையும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவி வருகின்ற அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கின் திணைக்களப் புத்தகத்தின் படியான மீதிக்கும் திறைசேரி கணனி அச்சுப் பிரதி மீதிக்கும் இடையே ரூபா 4,766 வேறுபாடு காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அதனை கணக்கிணக்கம் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்டிருந்த 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 986,345 ஆன போதிலும் அப்பழைய கடன்களை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டிறுதி மீதிக்குமிடையே 2011 ஆம் ஆண்டில் நிலவிய ரூபா 1,229,995 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதி 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,107,052 வரை அதிகரித்திருந்தது. அம் மீதியினை கணக்கிணக்கம் செய்து திருத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2011 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய SA/AS/MS/06/28 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பழைய கடன் மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 3.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திலுள்ள 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் குழுவின் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த 01 மேலதிகம் மற்றும் 19 குறைவுகள் தொடர்பிலும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சிக்காக ஒன்பது வகைகளினான 11 பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டிருந்த போதிலும், அப் பொருட்கள் திணைக்களத்திற்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவுச் சான்றிதழ்களை அச்சிடும் 20 இயந்திரங்கள் ஒன்று ரூபா 583,477 வீதம் 2010 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 11,669,540 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட 20 இயந்திரங்களில் 07 இயந்திரங்கள் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் 2012 திசெம்பர் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையில் 04 இயந்திரங்கள் எலிகள் ஏற்படுத்திய சேதங்கள் காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அவ்வாறே திணைக்களத்தின் புள்ளிவிபரவியல் பிரிவின் அச்சு நடவடிக்கைகளிற்காக சாதாரண அச்சு இயந்திரமொன்றை வழங்குவதற்குப் பதிலாக ரூபா 583,477 செலவிட்டு பதிவுச் சான்றிதழ்களை அச்சிடும் இயந்திரமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | |
| நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வுச் சபையொன்றை நியமித்து அதன் மீதான அறிக்கை 2013 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 880 | அரசாங்க பண வருமானங்கள், முத்திரைகள் அல்லது பண்டங்கள் போன்றவைகளுக்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் அரசாங்க உத்தியோகத்தர் பிணைகள் கட்டளைச்சட்டத்தின் (612 ஆம் அத்தியாயம்) கீழ் பிணைப்பணத்தினை வைப்புச்செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் கணனி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இனங்காத விதத்தில் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தேசத்தை கட்டியெழுப்பும் வரியினை உற்பத்தியாளர் அல்லது சேவை வழங்குனரினால் தாங்கிக்கொள்தல் என்ற ஏற்பாடு 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்திற்கமைய காணப்பட்ட போதிலும், சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்தல் தொடர்பில் அந்த வரித்தொகையுடன் வழங்கல் நிறுவனத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை காரணமாக 2009 மே தாதம் முதல் 2012 திசெம்பர் மாதம் வரை சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தமைக்காக விநியோக நிறுவனத்திற்கு ரூபா 44,538,368 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் படியும் அதற்கான திருத்தங்களின் படியும் எந்தவொரு நிறுவனத்திலும் வழங்கல் சேவைகள் தொடர்பில் காலாண்டுக்கு பெறப்படுகின்ற வழங்கல் சேவைகளின் பெறுமதி ரூபா 650,000 அல்லது ஆண்டொன்றிற்கு ரூபா 25 இலட்சத்திற்கு மேற்படின் பெறுமதிசேர் வரிக்கு கண்டிப்பாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களம் பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்யப்பட்டிருக்காமை காரணமாக பெருமளவான வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. ஒரே திணைக்களத்தின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான சேவைகளின் வழங்கல் முறையே ரூபா 6,325,878,729 மற்றும் ரூபா 6,577,711,148 ஆக காணப்பட்ட போதிலும், பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்யப்பட்டிருக்காமை காரணமாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் அரசாங்கத்திற்கு ரூபா 1,548,430,785 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(iii) மேற்படி (i) மற்றும் (ii) ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த நிலைமையினை திருத்திக்கொள்வதற்கு திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.7 செயலாற்றுகை

#### 3.7.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான கருமங்கள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) வாகனங்களின் உரிமையினை கைமாற்றம் செய்தல் போதியளவில் நிறைவேற்றப்படாமை.

(i) வாகனங்களின் உரிமை மாற்றமடைகையில் மோட்டார் வாகனங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(3)(அ) பிரிவின் ஏற்பாட்டின் படி வாகனப் பதிவு உரிமையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாட்டின் படி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அதிகாரச்சட்டத்தின் 12(3)(ஆ) பிரிவின் படி புதிய உரிமையாளராக பதிவுசெய்துகொள்வதற்கு உரிமை கைமாற்றப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களிற்குள் விண்ணப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாட்டின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொகுசு வரிகளை அறவிடுகையில் போதியளவில் நிறைவேற்றப்படாத கருமங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலுவை வருமானங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்காமை மற்றும் நிலுவை வருமானங்களை சேகரிப்பதில் பலவீனங்கள் காணப்பட்டமை.

(ii) வரித் தொகைகளை அறவிடுதல் மற்றும் பெறப்பட வேண்டிய வரித் தொகைகள் தொடர்பில் முறையான அறிக்கைகள் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கணனி முறைமையிலும் அதன் செயற்பாட்டிலும் காணப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வரியினை அறவிடுதல் நடவடிக்கையினை உரிய முறையில் நிறைவேற்றாத காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வரியினை ஏய்ப்புச் செய்கின்ற வாகன உரிமையாளர்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) வாகனப் பதிவுகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் வாகன உரிமையாளர்களிடமிருந்து சொகுசு வரியினை அறவிட வேண்டிய போதிலும், அவ்வாறு 54 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருக்கவில்லை. தாபன விதிக்கோவையின் படி பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு திணைக்களத்தினால் அது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 34 வாகன உரிமையாளர்களிடமிருந்து அந்த வரித் தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) சொகுசு வரி பற்றுச்சீட்டுப் புத்தகங்களை ஒவ்வொரு காப்புறுதி நிறுவனத்திற்கும் வழங்குதல் மற்றும் மீள பெற்றுக்கொள்ளலை முறைப்படி இனங்காணக் கூடிய விதத்தில் அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணனி முறைமையில் இரகசிய சொற்பதங்களை (Pass word) பயன்படுத்துதல் தொடர்பில் காணப்படுகின்ற முறையற்ற தன்மைகள்

---

(i) ஒரு உத்தியோகத்தர் புதிய பதிவு பிரிவொன்றிலிருந்து ஒப்படை கிளைக்கு அல்லது ஒப்படை பிரிவிலிருந்து புதிய பதிவு பிரிவொன்றிற்கு அல்லது வேறு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்படுகையில் முன்னைய பிரிவில் பயன்படுத்திய இரகசிய சொற்பதங்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்காத 20 உத்தியோகத்தர்கள் இருக்கின்றமை வெளிப்பட்டது.

(ii) திணைக்களத்திலிருந்து ஓய்வுபெறுகையில் அல்லது திணைக்களத்திலிருந்து வேறு திணைக்களங்களிற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கையில் அல்லது உத்தியோகத்தர் ஒருவர் பதவி விலகிச் செல்கையில் அல்லது மரணிக்கையில் அந்த உத்தியோகத்தர் பயன்படுத்திய இரகசிய சொற்பதங்கள் இரத்துச் செய்யப்பட்டிருக்காத ஐந்து உத்தியோகத்தர்கள் இருக்கின்றமை வெளிப்பட்டது.

(iii) 2011 சனவரி 10 ஆந் திகதிய DMT/COM/113 ஆம் இலக்க திணைக்கள பணிப்புரைகள் சுற்றறிக்கை மற்றும் 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய DMT/H/E/06/01 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் படி வாகன இலக்கங்களை தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளடக்குதல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் தடைசெய்யப்பட்ட பட்டியலிருந்து அகற்றுதல் குறித்த பிரிவுகளின் உதவி ஆணையாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஏனைய பயன்படுத்துனர் பெயர்களிற்கு (User Name) உரித்துடைய உத்தியோகத்தர்கள் தமது இரகசிய குறியீடுகளால் வாகனங்களை தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளடக்குவதற்கு காணப்படுகின்ற வாய்ப்பினை சரிசெய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகனங்கள் புதிதாகப் பதிசேய்யப்படுதல்.

வாகனங்கள் புதிதாகப் பதிவுசெய்யப்படுதல் தொடர்பில் பின்வரும் கருமங்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் பணி திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலுவலகங்களிற்கு நாளொன்றிற்கு பதிவுக்காக வருகின்ற மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட மிக சொற்ப எண்ணிக்கையாகும். திணைக்களத்தின் கணனி வலைப்பின்னல் சகல மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டிருக்காமை, மாவட்ட அலுவலகங்களிற்காக வழங்கப்பட்டுள்ள வாகன பதிவு இலக்கங்கள் பழமையானவையாக காணப்பட்டமை இவ்வாறு மாவட்ட அலுவலகங்களிற்கு பதிவுக்காக வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கை குறைவதற்கு காரணங்களாகும். அதன்படி இப் பணியை பன்முகப்படுத்திய நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

(ii) இறக்குமதிசெய்யப்பட்ட பயன்படுத்திய கைஉழவு இயந்திரங்கள் பதிவுசெய்வதற்காக திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகையில் மோட்டார் வாகன பரிசோதகரால் அந்த வாகனத்தை பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தி பரிசோதனை அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திணைக்களத்தில் இடம்பெறுகின்ற மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு தொடர்ச்சியாக கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் துரிதமாக விசாரணைகளை நடாத்தி அந்த மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த வாகனங்களின் பதிவுகளை இரத்துச் செய்தல் அடங்கலாக வாகன உரிமையாளர் தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மோாட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள கருமங்கள்

மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 08 மற்றும் 18 ஆம் பிரிவுகளில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) விபத்துக்குள்ளான அல்லது வேறு விதத்தில் முழுமையாக அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பில் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம்

நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனங்களின் பதிவை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பதிவு இரத்துச்செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பான பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளிற்கு மேலான காலமாக வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிராத வாகனங்கள் தொடர்பில் மோட்டர் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

(iv) சுனாமி, பயங்கரவாத அனர்த்தங்கள் அடங்கலாக இயற்கையான மற்றும் இயற்கையற்ற காரணங்களால் அதிகமான வாகனங்கள் அழிவுற்றிருந்த போதிலும், அந்த வாகனங்கள் தொடர்பில் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) நாட்டினுள் உள்ளபடியாக ஓட்டத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்கள் தொடர்பான புள்ளவிபரத் தகவல்களை இனங்காணக்கூடிய விதத்தில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வாகன கோவைகளை பாதுகாத்து வைத்திருத்தல்.

திணைக்களத்தில் நாளாந்தம் பதிவுசெய்யப்படுகின்ற வாகனங்களின் மூலக் கோவைகளை பாதுகாத்து வைத்திருத்தல் அத்தியாவசிய பணியான போதிலும், வாகனங்களின் அதிகளவான மூலக் கோவைகள் திணைக்களத்தின் பொறுப்பில் இல்லாது அல்லது காணாமல் போயிருந்ததுடன் அவற்றின் அத்தியாவசிய பணிகள் திணைக்களத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) வெகுமதி நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான கருமங்கள்

வெகுமதி நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் பிரதான கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றிணைத்தல், புதிதாக வடிவமைத்தல், நிறத்தை மாற்றுதல், கதிரியக்குதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் நடவடிக்கைகள் அடங்கலான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு தவறான செயற்பாடுகளை குறைத்தல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுத்தல் இந்த நிதியம் தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமான போதிலும், அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பல்வேறு தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆட்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் நபர்களை உருவாக்குவதும், அவ்வாறான தகவல்களை வழங்குவதற்கு

அவர்களுக்கு ஆர்வமூட்டுதலும் அவ்வாறான தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களை ஊக்குவித்தலும் வெகுமதி நிதியத்தை தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகளான போதிலும், அவ்வாறான தகவல்களை வழங்குகின்றவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் விதத்திலான எவ்வித நடவடிக்கைகளும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 திட்டமிடுதல்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் வாகனக் கிராம எண்ணக்கருவிற்கு ரூபா 0.5 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அதற்காக எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 7 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,768,082 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மாவட்ட அலுவலகங்களை பன்முகப்படுத்துவதற்காக ரூபா 100 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பணி மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 வாகனங்களை பதிவுசெய்தல், ஒப்படைத்தல் அடங்கலான பணிகளை நிறைவேற்றுவதற்கான கணனி முறைமை

வாகனங்களை பதிவுசெய்தல், ஒப்படைத்தல் அடங்கலான பணிகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த கணனி முறைமையில் பின்வரும் முறைமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுங்கத்தின் கணனி வலைப்பின்னலூடாக திணைக்களத்திற்கு கிடைக்கின்ற வாகனங்களின் தகவல்களை நேரடியாகவே மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு இயலுமான விதத்தில் வாகன பதிவுக்குரிய முக்கியமான சகல தகவல்களையும் இணைய தொடர்பினூடாக நேரடியாகவும் மாற்றப்பட முடியாத விதத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் கணனி முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் ஏதேனுமோர் தகவலை மாற்றுகையில் அது முறைப்படியாகவும் வெளிப்படையான விதத்திலும் நிறைவேற்றப்பட வேண்டிய விதத்தில் கணனி முறைமை நிகழ்ச்சித்திட்டங்களும் உபாய முறைமைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அனுமதியற்ற நுழைவுகள் மற்றும் அனுமதியற்ற திருத்தங்களை செய்வதற்கு முடியாதவாறும் உள்ளீட்டு ஆவணமின்றி தரவுகளை நேரடியாக கணனிக்குள் நுழைப்பதற்கு முடியாதவாறும் மாகாண அலுவலக முறைமைக்குள் நுழைந்து தரவுகளை அனுமதியின்றி திருத்துதல் மற்றும் தரவுகளை புதிதாக நுழைத்தல் என்பவற்றை மேற்கொள்ள முடியாதவாறும் போதியளவு உபாயங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக மாத்திரம் கணனி முறைமையினை பயன்படுத்தப்படுகின்றது அனுமதிக்கப்பட்ட நபர்கள் மாத்திரம் முறைமைக்குள் நுழைய முடியுமெனவும் அனுமதிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன எனவும் தயாரிக்கையில் தகவல்கள் இனங்காணப்பட்டு திருத்தப்படுகின்றன எனவும் நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்காக போதியளவு கட்டுப்பாடுகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) திணைக்கள உத்தியோகத்தர்களின் கணனி அறிவினையும் ஆற்றலினையும் அதிகரிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கையேடுகள் உள்ளிட்ட கணனி முறைமையொன்றில் ஏற்படுத்தப்பட வேண்டிய பொதுவான கட்டுப்பாடுகள் (General Controls) மற்றும் பிரயோக கட்டுப்பாட்டு (Application Control) முறைமைகளை போதியளவு பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் உற்பத்தி ஆண்டு, உற்பத்தி நாடு மற்றும் சிலிண்டர் இயலளவு உள்ளிட்ட வாகனத்தை பதிவுசெய்வதற்குத் தேவையான முக்கிய சில தகவல்கள் சுங்க கணனி வலைப்பின்னலூடாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணனி வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக புதிய வாகனங்களை பதிவுசெய்யும் பிரிவின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு வாகனம் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு உள்ளடங்கலான தகவல்களை மாற்றம்செய்து பதிவுசெய்வதற்கு வாய்ப்புக்

கிடைத்திருந்தது. அவ்வாறே இவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட முறைகேடான சந்தர்ப்பங்கள் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்டிருந்தன.

(எ) புதிய மோட்டார் சைக்கிள்களின் பதிவுசெய்தலுடன் தொடர்புடைய கணனி முறைமையின் பரிசோதனையின் போது, இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் செஸி இலக்கம், என்ஜின் இலக்கம் உள்ளிட்ட ஒவ்வொரு மோட்டார் சைக்கிளினதும் தகவல்கள் சுங்க கணனி வலைப்பின்னலூடாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணனி வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டிருக்காமையால் புதிய மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்யும் பிரிவிலுள்ள பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிற்கு சுங்கத்தீர்வை செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட அல்லது சட்டரீதியற்ற விதத்தில் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மிகவும் இலகுவாக பதிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

## 3.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த ரூபா 1,225,656 கூட்டுத்தொகையான 06 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தவையாகும். தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் ஒருசிலவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மோட்டார் வாகன அதிகாரச்சட்டம் (203 ஆம் அத்தியாயம்) மற்றும் அதற்கான திருத்தங்களின் படி மோட்டார் வாகனமொன்று இறக்குமதிசெய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் கடந்த பின்னர் பதிவுசெய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த மோட்டார் வாகனங்களின் பதிவுக்காக தாமதக் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்கையில் திணைக்களத்தினால் தொடர்ந்தும் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக அரசாங்கத்திற்கு பெருமளவு வருமானம் இழக்கப்படுகின்றமை கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், திணைக்களம் அவ்வாறு தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆரம்பத்தில் தொடங்குகின்ற ஆங்கில எழுத்துத் தொகுதியின் கீழ் எழுத்துக்களின் பின்னர் வருகின்ற 04 இலக்கங்களின் கூட்டுத்தொகை 13

ஆகவுள்ள இலக்கம் தவிர்ந்த ஏனைய எல்லா இயக்கங்களின் கீழும் வாகனங்கள் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், KI-5001 முதல் KI-9999 ஆம் இலக்கம் வரையும் KV-7001 முதல் KW-0658 ஆம் இலக்கம் வரையுமான வாகனங்களை பதிவுசெய்கையில் அந்த இலக்கத் தொகுதிகளுக்கிடையே வருகின்ற வாகனங்களை இனங்காண்பதற்காக 40 இலக்கங்களின் கீழ் வாகனங்களை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி கணக்காய்வுத் தெரிவுக்குப் புறம்பாக அதிகளவு எண்ணிக்கையில் இவ்வாறான வாகனங்களை இனங்காணுகின்ற இலக்கங்களின் கீழ் வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாக வாகன இலக்கங்களை தவிர்த்து வாகனங்களை பிதிவுசெய்திருந்தமையால் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மோசடியாக பதிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு மற்றும் அவ்வாறு தவிர்க்கப்பட்டுள்ள இலக்கங்களை பயன்படுத்தி பொய்யான வாகன பதிவுச் சான்றிதழ்களின் மூலம் வாகனங்களை செலுத்துவதற்கு மிக கூடுதலான ஆபத்து நிலவுகின்றமை எனபன அவதானிக்கப்பட்டன.

(இ) இலங்கை சுங்கத்தின் மத்திய அகற்றல் பிரிவினால் விற்கப்படுகின்ற வாகனங்களின் செஸி இலக்கங்கள் கறுப்புப் பட்டியலிடப்பட்டு அந்த செஸி இலக்கங்களிற்கு CMT இலக்கத்தினை வழங்கி Registration Status Bought from Auction என உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 20 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த பயன்படுத்தப்பட்ட மூன்று வாகனங்கள் 2010 மே 22 ஆந் திகதி சுங்கத் திணைக்களத்தின் மத்திய அகற்றல் பிரிவினால் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மத்திய அகற்றல் பிரிவினால் விற்பனை செய்யப்பட்டிருந்த மூன்று வாகனங்களினதும் வாகனங்களை இனங்காணும் இலக்கங்களின் கீழ் இன்னும் மூன்று வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(உ) மோட்டார் வாகன உரிமை மாற்றமடைகையில் பதிவுச் சான்றிதழிலுள்ள அச்சிடப்பட்ட திகதி கணனி முறைமையின் படி சுயமாக அச்சாகின்ற போதிலும், 302 ஆம் இலக்க தொகுதிக்குரிய 2111 வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழ்களின் பரிசோதனையில் அச்சிடப்பட்ட திகதியின் பின்னரும் உரிமை மாற்றம் இடம்பெற்றிருந்த 84 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஊ) வாகனங்களின் சிலிண்டர் இயலளவு மற்றும் உற்பத்தி ஆண்டு அடங்கலான சில முக்கியமான தகவல்கள் வாகன பதிவுச் சான்றிதழில் உள்ளடக்கப்பட்டிருக்காத இரண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட திகதியாக வாகன பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னரான திகதியொன்றில் வாகனத்தின் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்த இரண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஏ) ஒரே நாளில் தனியொரு வாகனம் மூன்று தடவைகளிற்கு மேல் மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஐ) கணக்காய்வு பரிசோதனையின் படி கறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 61 வாகனங்களில் 08 வாகனங்களை மீண்டும் கறுப்பு பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த அகற்றலுக்கு அடிப்படையாக அமைந்திருந்த காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) திணைக்களத்தின் கணனி தகவல் முறைமையின் படி சுங்க பதிவுகள் மற்றும் திகதிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த சில வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்ட திகதிக்கு முன்னரே மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த 82 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றுக் காணப்படடன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

### (அ) கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டிலிருந்து விலகிச்செயற்படல்

பதிவுச் சான்றிதழ்களை அச்சிடும் 20 இயந்திரங்கள் ரூபா 11,669,540 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான செயலாற்றல் பிணைமுறி ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதமான ரூபா 583,477 ஆக காணப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி ரூபா 100,000 ஆக காணப்பட்டது. அவ்வாறே கொள்வனவு நிபந்தனைகளின் படி இப்பொருட்கள் 30 நாட்களிற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அந்த அச்சிடல் இயந்திரங்களை வழங்குவதற்கு மூன்று மாதங்களிற்கும் மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களிற்காக முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 78,360 இணைந்த படியினை அங்கீகரித்திருந்த, உறுதிப்படுத்தியிருந்த பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு 2012 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 06(இ) அறிவுறுத்தலின் பிரகாரம் சகல படிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் செலுத்துதல் சம்பந்தமாக பொது நிர்வாக

உள்நாட்டலுவல்கள் அமைச்சினன் ஊடாக தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுவிடம் விசாரித்து ஆலோசனை பெறப்பட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்படாது 2012 ஆம் ஆண்டில் ரூபா 128,146,204 தொகை ஊக்குவிப்புப் படியாக பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**3.11 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் மீதான விபரங்கள் வருமாறு.

(அ) ஒரு சுங்க குறிப்பினூடாக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் உழவு இயந்திரங்களும் தொகையாக இறக்குமதி செய்யப்படுகையில் சுங்கக் குறிப்பிலுள்ள சகல மோட்டார் சைக்கிள்களினதம் உழவு இயந்திரங்களினதும் செஸி இலக்கங்கள், என்ஜின் இலக்கங்கள் போன்ற விபரங்களை உள்ளடக்கிய ஆவணத்தின் (Packing List) தகவல்களை மாற்றியமைத்து சுங்க வரியினைச் செலுத்தாது இந்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களினதும் உழவு இயந்திரங்களினதும் செஸி இலக்கங்கள், என்ஜின் இலக்கங்கள் போன்ற விபரங்களை அந்த ஆவணத்தில் உள்ளடக்கி பொய்யாகத் தயாரிக்கப்பட்டிருந்த பொதியிடல் ஆவணத்தை (Packing List) சமர்ப்பித்து திணைக்கள உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்புடன் மோட்டார் சைக்கிள்களும் உழவு இயந்திரங்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களிற்கு மேலதிகமாக சாதாரண சட்ட திட்டங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த வாகனங்கள், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்படுகையில் உரிய உற்பத்தி வருடம், 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான வீச்சில் பொய்யாக எதிர்வரும் ஆண்டுகள் உள்ளடக்கப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டு பாரிய முறைகேடுகள் இடம்பெற்றிருந்த 29 சந்தர்ப்பங்கள் வெளிப்பட்டன.

(இ) 2013 ஆம் ஆண்டின் மே மற்றும் யூன் மாதங்களில் பதிவுசெய்யப்பட்டிருந்த KV-7001 முதல் KW-0658 வரையான வாகன இனங்காணல் இலக்கங்களின் கீழ் NZT மற்றும் NZE செஸி வகையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த கார்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் மோட்டார் சைக்கிள்களும் வாகன உதிரிப்பாகங்களும் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஐந்து சுங்க குறிப்புகளின் இலக்கங்களை பயன்படுத்தி சட்டவிரோதமாக சுங்கத்தீர்வை செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்டிருந்த டொயொடா எலியன், டொயொடா பிரீமியோ மற்றும் டொயொடா கொரொல்லா எக்ஸியோ வகைகளுக்குரிய 05 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் மோசடியாக பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய மோட்டார் வாகனங்களின் சுங்க குறிப்பு இலக்கத்தினை போலியாகப் பயன்படுத்தி சட்டவிரோதமாக சுங்க வரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்டிருந்த அல்லது தயாரிக்கப்பட்டிருந்த

டொயொடா, லேண்ட குருசர், பிராடோ வகையிலான இரண்டு ஜீப் வாகனங்கள், இரண்டு மிட்சுபிசி மொன்டேரோ வகை ஜீப் வாகனங்கள் மற்றும் நான்கு மர்சிடஸ் பென்ஸ் வாகனங்கள் அடங்கலான 18 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் மோசடியாக பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(உ) G, H மற்றும் J போன்ற ஆங்கில எழுத்துக்களில் தொடங்குகின்ற பழைய இலக்கத் தொகுதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களின் கணனி இலக்கங்களை தந்திரமாக மாற்றியமைத்து அதற்குப் பதிலாக சட்டவிரோதமாக நாட்டிற்குள் எடுத்துவரப்பட்டிருந்த நவீனரக 03 சொகுசு வாகனங்களின் விபரங்களை கணனிக்குள் உட்புகுத்தி மோசடியாக அந்த 03 வாகனங்களும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஊ) G, H மற்றும் J போன்ற ஆங்கில எழுத்துக்களில் தொடங்குகின்ற பழைய இலக்கத் தொகுதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த ஏனைய குறைந்த பெறுமதி கொண்ட வாகனங்களின் கணனி இலக்கங்களை தந்திரமாக மாற்றியமைத்து சட்டவிரோதமாக நாட்டிற்குள் எடுத்துவரப்பட்டிருந்த நவீனரக சொகுசு வாகனங்களின் விபரங்களை கணனிக்குள் உட்புகுத்தி மோசடியாக வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) G, H மற்றும் J போன்ற ஆங்கில எழுத்துக்களை ஆரம்பத்தில் கொண்டுள்ள இலக்கத் தொகுதிகளின் கீழ் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்கையில் பல்வேறு காரணங்களால் சில இலக்கங்களின் கீழ் வாகனங்களை பதிவுசெய்தல் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு தவிர்க்கப்பட்டிருந்த இலக்கங்களை பயன்படுத்தி இந்நாட்டில் சுங்க வரியினைச் செலுத்தாது சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்டிருந்த 29 வாகனங்கள் மோசடியாக பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஏ) இலக்கத் தொகுதிகளின் கீழ் வாகனங்களை இனங்காணும் இலக்கங்களை வழங்குவதற்குப் பதிலாக ஆங்கில எழுத்துத் தொகுதிகளின் கீழ் வாகனங்களை இனங்காணும் இலக்கங்களை வழங்குதல் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் பெற்றோல் கார்களிற்காக 302 எழுத்துத் தொகுதியின் கீழுள்ள சகல இலக்கங்களினதும் கீழ் வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி, 302 எழுத்துக்கள் தொகுதியின் கீழ் எஞ்சியிருந்த இலக்கங்களைப் பயன்படுத்தி சுங்க வரியினைச் செலுத்தாது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த அல்லது தயாரிக்கப்பட்டிருந்த வாகனங்களை மோசடியாக பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறான ஐயத்திற்குரிய 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஐ) ஆரம்பத்தில் தொடங்குகின்ற ஆங்கில எழுத்து அல்லது இலக்கத் தொகுதியின் கீழ் எழுத்துக்களின் பின்னர் வருகின்ற 04 இலக்கங்களின் கூட்டுத்தொகை 13 இலக்கத்தின் கீழ் வாகனங்கள் பதிவுசெய்யப்படாத போதிலும், அந்த இலக்கங்களின் கீழும் 06 சொகுசு கார்களை மோசடியாக பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஒ) இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வாகனமொன்று 2009 செப்தெம்பர் 19 ஆந் திகதி வேறொரு நபரின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளமை 2012 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் கணனி முறைமையிலுள்ள வாகனப் பதிவுச் சான்றிதழ்களை பரிசோதித்ததில் வெளிப்பட்டது. அதன்படி, ஒரு வாகனத்தை இனங்காணும் இலக்கத்தின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் வருடாந்த வருமான வரிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சொகுசு வரித் தொகையைச் செலுத்துதல் போன்ற தகவல்களின் படி, சுங்க வரி செலுத்தாது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்டிருந்த 02 மிட்சுபிசி மொன்டொரோ வகை வாகனங்களை பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) விபத்துக்குள்ளாகி அல்லது வேறு விதத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களின் இலக்கங்களைப் பயன்படுத்தி சுங்க வரி செலுத்தாது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த அல்லது தயாரிக்கப்பட்டிருந்த ஒரு மிட்சுபிசி மொன்டொரோ வகை வாகனத்தை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஃ) சுங்க வரி செலுத்தாது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த “ஹமர்” (Hummer) வகை மோட்டார் கார் முறையற்ற விதத்தில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த வாகனத்தின் கோவை காணாமல் போயிருந்தது.

(க) சுங்கத் திணைக்களத்தின் கணனி முறைமை வலைப்பினலூடாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற வாகனங்களின் செஸி இலக்கங்கள் உள்ளிட்ட தகவல்களை மாற்றியமைத்து அநேக முறைகேடுகள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் செய்யப்பட்டிருந்தன. மத தளங்களுக்காக வழங்கப்பட்டிருந்த வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் மீது இறக்குமதி செய்யப்பட்டிருந்த 158 இற்கும் மேற்பட்ட வாகனங்களைப் பதிவுசெய்கையில் அந்த அனுமதிப்பத்திரங்களிற்குரிய நிபந்தனைகளை நீக்கி பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவ்வாறு அவதானிக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகும்.

(கா) வெகுமதி திட்டத்தின் கீழ் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் எடுத்துவரப்பட்டிருந்த வாகனங்களை பதிவுசெய்கையில் பின்வரும் முறைகேடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வாகன இறக்குமதி பத்திரங்களிலுள்ள நிபந்தனைகள் முறையற்ற விதத்தில் நீக்கப்பட்டிருந்த 158 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை

(ii) வாகனத்தின் ஆரம்ப பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இறக்குமதியாளரின் பெயரில் அல்லாது வேரொரு நபரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த 150 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை.

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல் மற்றும் ஒப்படைத்தல் பதிவுசெய்யப்பட்ட தினத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் முடியும் வரை மேற்கொள்ளப்பட முடியாத போதிலும், அந்த ஏற்பாடுகளை மீறி அக் காலத்தினுள்ளேயே வேறு தரப்பினர்களுக்கு வாகனங்களை ஒப்படைத்திருந்த 29 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமை.

(iv) மேற்படி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் உற்பத்தி ஆண்டினை 01 முதல் 05 வருடங்கள் வரை பொய்யாக எதிர்வரும் ஆண்டை உள்ளடக்கி பதிவுசெய்யப்படும் பாரதூரமான முறைகேடுகள் இடம்பெற்றிருந்த 120 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை.

(v) மேற்படி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த 03 வாகனங்களின் கோவைகள் கணக்காய்வுப் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த வாகனங்களின் கோவைகளை பரிசோதித்ததில் அந்த வாகனங்களின் உள்ளபடியான உற்பத்தி ஆண்டு 2005 ஆன போதிலும், 2008 எனக் குறிப்பிட்டு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(vii) அவ்வாறே 2013 ஏப்ரல் 04 ஆந் திகதிய கணனி முறைமையின் தகவல்களின் படி இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த வாகனத்தின் உற்பத்தி ஆண்டு 2004 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீண்டும் 2013 ஏப்ரல் 18 ஆந் திகதி கணனி முறைமையினை பரீட்சித்ததில் அந்த வாகனத்தின் உற்பத்தி ஆண்டு 2007 என மாற்றப்பட்டிருந்தது.

(கி) மிலட் வகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 164 நான்கு சில்லுகளைக் கொண்ட டிரக்டர்கள் அந்த வகையின் கீழுள்ள மெசி பர்குசன் வகையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(கீ) மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்திருந்த சுங்க இறக்குமதி குறிப்புத் தொகுதிகளிற்குரிய இறக்குமதிக் குறிப்புக்களையும் ஏனைய ஆவணங்களையும் போலியாக பயன்படுத்தி பீஎம்டபிள்யூ, டொயொட்டா பிராடோ மற்றும் மர்சிடிஸ் பென்ஸ் 08 அதிசொகுசு கார்கள் உள்ளடங்களாக 26 வாகனங்கள் மோசடியாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

(கு) சுங்க குறியீட்டு இலக்கம் 8705 இன் கீழ் பொருட்களையோ அல்லது ஆட்களையோ போக்குவரத்துச் செய்யும் நோக்கத்திருந்து விலகி விசேட நோக்கங்களிற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற 08 வாகனங்கள் இரட்டைக் நோக்க வாகனங்கள் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு

செய்யப்பட்டிருந்தன. இந்த விசேட நோக்கங்களிற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களிற்கு சுங்க குறியீட்டு இலக்கம் 8705 இன் கீழ் சராசரியாக ரூபா 01 முதல் 02 இலட்சத்திற்கு இடைப்பட்ட தொகையில் சுங்க வரி அறவிடப்படுவதுடன் இரட்டை நோக்க வாகனமாக சுங்க குறியீட்டு இலக்கங்கள் 8702 மற்றும் 8704 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்திற்காக சுங்க வரியாக ரூபா 15 -- 50 இலட்சியத்திற்கு இடைப்பட்ட வரித் தொகை அறவிடப்படுதல் வேண்டும். அதன் படி அதிகளவான வரித்தொகை இதன்மூலம் அரசாங்கத்திற்கு மோசடி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கூ) 2009 திசெம்பர் 29 ஆந் திகதிய CBMVI – 5636 ஆம் இலக்க சுங்க குறிப்பின் மூலம் சுங்க குறியீட்டு இல. 8706.00.03 இனால் வாகனங்களின் செஸி மற்றும் என்ஜின் உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்டிருந்த காணக்கூடியதாக உள்ள 23 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் இரட்டை நோக்க வாகனங்கள் என பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(கெ) 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய CBMVI – 570 மற்றும் 2009 சனவரி 12 ஆந் திகதிய CBMVI – 207 ஆம் இலக்க சுங்க குறிப்புக்களின் மூலம் 08 லேண்ட ரோவர், டரக், கெப் அடங்கலான வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அந்த 08 வாகனங்களில் இரண்டு வாகனங்கள் மோட்டார் கார்களின் கீழ் சொகுசு ஜீப்கள் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் மோசடியாக பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(கே) 2011 நவம்பர் 22 முதல் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையான காலத்தினுள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் சொகுசு வரிகள் அறவிடப்பட வேண்டிய 03 வாகனங்களிலிருந்தும் அரைச் சொகுசு வரிகள் அறவிடப்பட வேண்டிய 22 வாகனங்களிலிருந்தும் வரிகளை அறவிடுதல் முழுமையாக விடுபட்டிருந்தமை வெளிப்பட்டது. இந்த விடுபாடுகளின் காரணமாக அரசாங்கத்திற்கு அறவிடப்படாதிருந்த வரித் தொகை ரூபா 940,000 ஆகும்.

(கொ) வாகனங்களை கையளிப்போரினால் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த (MTA 6) வாகன ஒப்படைத்தல் படிவத்தில் வாகனத்தினை ஒப்படைத்த திகதி குறிப்பிடப்படாது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(கோ) KDH 200 – 004118 ஆம் இலக்க வாகனத்தை விற்பனை செய்தல், ஒப்படைத்தல் மற்றும் ஏனையவருக்கு உரிமையாக்குதல் பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் செல்லும் வரை மேற்கொள்ளப்படுதல் கூடாது எனக் காணப்பட்ட நிபந்தனை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தினால் அகற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் அவ்வாறான

கடிதமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி, பொய்யான ஆவணங்களின் கீழ் இந்த வாகனத்தின் நிபந்தனைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ச) வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரால் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் (MTA 6) தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வாகனங்களின் உரிமை மாற்றமடைந்து பதினான்கு நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், புதிய உரிமையாளரின் பெயரில் அந்த வாகனங்களை பதிவுசெய்வதற்காக கோரிக்கை மேற்கொள்ளப்படாத 33 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(சா) வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளரால் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த (MTA 6) விண்ணப்பங்களின் படி வாகனத்தை ஒப்படைத்த திகதிகளுக்கும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருந்த வாகன ஒப்படைத்தல் திகதிகளுக்குமிடையே வேறுபாடுகள் நிலவிய பதினான்கு சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதன்படி, வாகனத்தின் புதிய உரிமையாளர்களால் வாகனத்தின் உரிமையினை மாற்றிக்கொள்வதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த (MTA 6) விண்ணப்பங்கள் தாமதத் தண்டப்பணங்கள் அறவிடப்பட முடியாதவாறு அல்லது குறைவாக அறவிடப்படக்கூடியவாறு ஒப்படைத்த திகதி பொய்யாக மாற்றப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(சி) வாகனங்களின் உரிமை மாற்றம் இரண்டு தடவைகள் இடம்பெற்றிருந்த போதிலும், முதலாவது முறையாக இடம்பெற்றிருந்த உரிமை மாற்றத்தை மறைத்து இரண்டாவது உரிமை மாற்றம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மோசடிகள் இடம்பெற்றிருந்த மூன்று சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இந்த நிலைமையினை ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அநேக வாகனங்களின் உரிமை மாற்றங்கள் சட்டரீதியாக இடம்பெறாதிருந்ததுடன் தவறான ஒப்படைத்தல்கள் மூலம் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(சீ) சொகுசு, அரைச் சொகுசு மற்றும் அரைச் சொகுசு இரட்டை நோக்க வரிகளை செலுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற பயன்படுத்தப்படாத அதிகளவு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன் அவ்வாறு காணாமல் போயிருந்த பற்றுச்சீட்டுக்களை மோசடியாக வரியினை செலுத்துவதற்காக பயன்படுத்தியிருந்த இரண்டு சந்தர்ப்பங்கள் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டிருந்தன. இருப்பினும், வரிப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களில் எவ்வளவு காணாமல் போயிருந்தன என தேடியறிவதற்கும் அவ்வாறு காணாமல் போயிருந்த பற்றுச் சீட்டுக்கள் மற்றும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும் திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 343 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சு) அரைச் சொகுசு இரட்டை நோக்க வரிக்கு உட்பட்ட டபள் கெப், மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் படி இரட்டை நோக்க வாகனமாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், மோட்டார் லொறியொன்றாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டவாறு மோட்டார் லொறியாக காண்பிக்கப்பட்டமையால் வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய அரைச்சொகுசு இரட்டை நோக்க வரியை அறவிட முடியாதிருந்தது. இந்த நிலைமையினால் மூன்றாண்டுகளிற்கான ரூபா 27,000 அரைச் சொகுசு இரட்டை நோக்க வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(சூ) SU 14-108288 ஆம் இலக்க செஸி இலக்கத்தினை பயன்படுத்தி இரண்டு வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**
--------------------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்ட சிக்கனமற்ற முறையில் இடம்பெற்றிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு.

(அ) தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்காக 2012 சனவரி 28 முதல் பெப்ரவரி 13 வரை திணைக்களத்தின் 19 உத்தியோகத்தகர்கள் பங்கேற்றிருந்தமைக்காக ஒருவருக்கு நாளொன்றிற்கு ரூபா 1,670 வீதம் உணவு இருப்பிட வசதிகளை வழங்குவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 698,863 செலுத்தப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருக்காத 172 மனித நாட்களிற்காக உணவு மற்றும் தங்குமிட வசதிகளிற்காக ரூபா 287,240 பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 இன் தேசத்திற்கு மகுடம் மற்றும் ஏனைய நடமாடும் சேவைகளிற்காக ரூபா 698,863 இற்கு துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் பௌதீக பரிசோதனையில் ஏறத்தாழ ரூபா 270,000 பெறுமதி கொண்ட 40,000 இற்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்கள் சுவடிக்கூடக் களஞ்சியத்தில் விநியோகிக்கப்படாது குவித்து வைக்கப்பட்டிருந்தமை வெளிப்பட்டது.

(இ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சி கூடத்தினை தயாரிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 2,348,700 தொகையும், 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,707,985 தொகையும் 2009 ஆம் ஆண்டில் ரூபா 2,227,479 தொகையும் என்ற வகையில் அசாதாரண செலவினங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் போக்குவரத்து அமைச்சின் தலையீட்டுடன் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இந்த பிரதான கூடத்தின் திணைக்களத்தின் பகுதியையும் உள்ளடக்கி கண்காட்சிக் கூடத்தினை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 1,377,000 ஆக காணப்பட்டது. அதன்படி, 2012 ஆம் ஆண்டில் அதற்கு முன்னைய ஆண்டுகளைக் காட்டிலும், ரூபா 1 மில்லியனுக்கும் குறைந்த தொகையில் இச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தமையால் முன்னைய மூன்று ஆண்டுகளிலும் ரூபா 3 மில்லியனுக்கு மேற்பட்ட பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.13 மனிதவள முகாமைத்துவம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 26 | 21 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 23 | 07 | 16 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 788 | 766 | 22 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 127 | 114 | 13 |
| | மொத்தம் | 964 | 908 | 56 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 56 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐந்து ஊழியர் வகைகளிற்கான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை ஆறு உத்தியோகத்தர்களான போதிலும் அந்த அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை அனைத்தும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(இ) சிரேஷ்ட மோட்டார் போக்குவரத்து பரிசோதகர் பதவியின் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 16 ஆன போதிலும், அதில் 75 சதவீதமான 12 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.